**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 209/2018 c/w OS 210/2018 c/w 262/2016</u>**

நாள் – 09.03.2026

DW 2 – பார்த்திபன் சக்கரவர்த்தி

த/பெ – லேட். தங்கவேல்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of March 2026)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது சொந்த ஊர் மடத்துக்குளம் வட்டம், கணியூர் கிராமம். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் திருப்பூரில் எனது மனைவி குழந்தையுடன் எனது உரிமையாளர் லோகநாதன் என்பவரின் தோட்டத்தில் வேலை பார்த்து வருவதால் எனக்கு ஒரு வாடகை வீடு கொடுத்துள்ளார். அந்த வாடகை வீடு லோகநாதனின் கார்மெண்ட்ஸ் கம்பெனியில் லைன் வீடுகளாக உள்ளது. அந்த கம்பெனி வேலம்பாளையத்தில் உள்ளது. நான் லோகநாதனிடம் வேலை செய்து வந்தேன் என்பதை காட்ட அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஆரம்பத்தில் இருந்தே லோகநாதனின் தோட்டத்தில்தான் வேலை பார்த்து வந்தேன். அவருடைய கம்பெனியில் நான் வேலை பார்க்கவில்லை. அந்த லோகநாதனுக்கு பல இடங்களில் சொத்து உள்ளது. ஆனால் நான் வஞ்சிபாளையத்தில் உள்ள தோட்டத்தில்தான் வேலை பார்த்து வருகிறேன். அதாவது தாவா சொத்தில்தான் நான் வேலை பார்த்து வருகிறேன். தாவா சொத்திற்கு தென்புறத்தில் லோகநாதனுக்கு 3 ஏக்கர் சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த 3 ஏக்கர் சொத்தில் ஒரு நபர் குடும்பத்துடன் தங்கி வேலை பார்த்து வருகிறார் என்றால் இல்லை. அந்த 3 ஏக்கர் சொத்தில் சகாயராஜன்

என்பவர் குடும்பத்துடன் தங்கி 7, 8 வருடங்களாக வேலை பார்த்து வருகிறார் என்றால் இல்லை.

2. தாவா சொத்து எந்த வருவாய் கிராமத்தில் உள்ளது என்றால் கணியாம்பூண்டி கிராமத்தில் உள்ளது. அந்த சொத்தின் பட்டாவை பார்த்துள்ளேன். அதில் யார், யார் பெயர்கள் உள்ளது என்றால் எனது ஓனர் லோகநாதன் பெயர் உள்ளது. மற்றவர்கள் பெயர் எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்து சம்பந்தமான வேறு என்னென்ன ஆவணங்களை படித்துப் பார்தேன் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தில் வாதிகள்தான் மாட்டுக்கொட்டாய் கட்டி கறவை மாடுகள் வைத்து பராமரித்து வருகிறார்கள் என்றும், அதேபோல் லோகநாதனின் 3 ஏக்கர் சொத்திலும் சகாயராஜன் மாட்டுத்தொழுவம் வைத்து கறவை மாடுகள் வைத்து பராமரித்து வருகிறார் என்று சொன்னால் இல்லை, தாவா சொத்தில் நான்தான் மாடுகள் வைத்து பராமரித்து வருகிறேன்.

3. வாதிகள் தாவா சொத்திற்குள் வந்து என்னிடம் பிரச்சனை செய்து கம்பிவேலியையும், கல்லையும், சிமெண்ட் தூணையும் மற்றும் தகர செட்டையும் உடைத்து விட்டார்கள். இது சம்பந்தமாக லோகநாதன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரின்பேரில் வாதிகளை அழைத்து விசாரித்து எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தார்கள். லோகநாதன் திருமுருகன் பூண்டி காவல்நிலையத்திற்கு வந்திருந்தாரா என்றால் இல்லை, போன் மூலம் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்துவிட்டார். அதனால் அவருக்காக வழக்கறிஞர் காவல்நிலையத்திற்கு வந்திருந்தார். அப்போது பிரச்சனை நடந்த இடத்திற்கு எனது ஓனர் லோகநாதன் நேரடியாக வந்தாரா என்றால் இல்லை, அவரது மேனேஜர்தான் வந்திருந்தார். அந்த பிரச்சனையின்போது

எங்கள் தரப்பில் நானும், என்னுடன் வேலை செய்து வந்த சுமார் 6 பேரும் இருந்தோம். வாதிகள் தரப்பில் 15 நபர்கள் வந்திருந்தார்கள்.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.21 போட்டோக்களில் நான் இருக்கிறேன் என்றால் சரிதான். அதில் என்னுடன் இருப்பவர்கள் என்னுடன் வேலை செய்யும் நபர்கள். அவர்கள் பெயர் நந்தகுமார், அஜீத்குமார், கார்த்திக், ரமேஷ் ஆகும். அந்த போட்டோக்களில் உள்ள இரும்பு கம்பிவேலிக்கு வெளியில்தான் நான் நின்றுகொண்டிருக்கிறேன் என்றால் சரிதான், அவர்களை தடுப்பதற்காக வேண்டி வெளியில் சென்று இருந்தேன். நான் லோகநாதனின் 3 ஏக்கர் சொத்தில்தான் நின்றிருக்கிறேன் என்றால் இல்லை தாவா சொத்தில்தான் நின்றிருக்கிறேன். எனது கையில் கட்டிங்பிளேயர் வைத்துள்ளேன் என்றால் சரிதான், அங்கு வந்தவர்களிடம் இருந்து பிடிங்கி வைத்திருந்தேன். அந்த கம்பிவேலியை துண்டித்துவிட்டு தாவா சொத்திற்குள் நுழைய நான்தான் முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. அந்த போட்டோவில் 2ம் வாதி சுந்தரம்மாள் நிற்கிறார் என்றால் சரிதான். அந்த போட்டோவில் திருமுருகண்பூண்டி போலிசாரிடம் நின்று பேசிக்கொண்டிருக்கிறேன் என்றால் சரிதான்.

5. தாவா சொத்தில் கம்பிவேலியை உடைத்து வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்காக வேண்டி நாங்கள் வந்தோம் என்றும், அதை வாதிகள் தடுத்துவிட்டார்கள் என்றும் அப்போது வாதிகள் தகவல் கொடுத்துதான் திருமுருகன்பூண்டி போலீசார் அங்கு வந்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் தகவல் கொடுத்துதான் போலீசார் அங்கு வந்தார்கள். நான் சொல்வது பொய் என்றும் வாதிகள் தகவல் கொடுத்துதான் போலீசார் தாவா சொத்திற்கு வந்து எங்களை காவல்நிலையத்திற்கு அழைத்து

சென்று எங்களை தாவா சொத்திற்கு போகக்கூடாது என்று எச்சரித்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. அதற்கு பிறகு நான் வழக்கு சொத்து பக்கமே வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை குறைந்த விலைக்கு வருகிறது என்பதற்காககதான் லோகநாதன் தாவா சொத்தை கிரையம் வாங்கினார் என்றும், அதனால் வாதிகள் லோகநாதனை மிரட்டியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதனால் லோகநாதனிடம் இருந்து மிரட்டி பணம் பறிக்க வேண்டிதான் வாதிகள் லோகநாதனின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

6. நான் சொத்தின் சுவாதீனத்தை எடுக்க வேண்டிதான் 09.10.2024 தேதியில் நான் அடியாட்களுடன் வந்தேன் என்றும், அதை தவிர எனக்கு தாவா சொத்து சம்பந்தமான விவரங்கள் எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் லோகநாதன் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.10 17:43:35 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**